செ.வெ. எண்: 711

நாள்: 23.10.2019

**தீபாவளி கொண்டாட்டத்தின் போது கடைபிடிக்க வேண்டிய வழி முறைகள்:-**

**முனைவர் செ.கி. காந்திராஜன், இ.கா.ப.,**
**காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும்**
**இயக்குநர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை**

- தமிழகம் முழுவதும் தீபாவளிதிருநாளை வருகின்ற 27.10.2019 அன்று மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு தேவையான அனைத்து பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது, மேலும் விழிப்புணர்வு பிரச்சாரங்களும் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ***"மாநிலத்தின் பாதுகாப்பானது இவ்வரசாங்கத்தின் கரங்களின் கீழ் நிறைவான பாதுகாப்பாக இருக்கிறது"*** என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, பட்டாசு வெடிக்கும் பொதுமக்களுக்கு உரிய விழிப்புணர்வை தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை ஏற்படுத்தி இருக்கிறது.

  தீயணைப்பு ஊர்திகள், தீயணைப்பு வீரர்கள் மற்றும் தீயணப்பு நிலையங்களிலுள்ள அவசரகால மீட்பு உபகரணங்கள் எல்லாம் 24x7 என எந்நேரமும் தயார் நிலையில் உள்ளது மட்டுமின்றி, விபத்து நடக்கும் இடத்திற்கு எவ்வித காலதாமதமுமின்றி விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பட்டாசு வெடிப்பதால் தீவிபத்துக்கள் ஏதேனும் ஏற்பட்டால் உடனே தகவல் தெரிவிப்பதற்கு வசதியாக சென்னை பெருநகரை பொருத்தவரை கீழ்கண்ட தொலைபேசி எண்கள் எந்நேரமும் இயங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

101, மற்றும்

நேரடிதொலைபேசிஎண்கள்

28554309

28554311

28554313

28554314

28554316

28554317

மேலும், பின்வரும் உதவி மாவட்ட அலுவலர்கள் மற்றும் நிலைய அலுவலர் கைபேசி எண்களையும் தேவைப்படின் தொடர்பு கொள்ளலாம்:-

94450 86081
94450 86082
94450 86083
94450 86085

தீபாவளியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் இந்த ஆண்டு 5728 பட்டாசு கடைகளுக்கு தடையின்மைச் சான்றுகளை தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை வழங்கி இருக்கிறது. தீயணைப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மற்ற அரசு துறைகளுடன் முன்கூட்டியே ஒருங்கிணைந்து செயலாற்றி தமிழ்நாடு முழுவதும் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக அதிகமக்கள் தொகை உள்ள சென்னை பெருநகரம், கோவை, சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற மாநகரங்களில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு தீயணைப்பு வசதிகள் அனைத்தும் முழுவீச்சில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

- சென்னை பெருநகரைப் பொருத்தவரை 2019-ம் ஆண்டில் பெருநகரிலுள்ள 39 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் உள்ளிட்ட 61 இடங்களில் ஊர்திகளை அதன் குழுவினரோடும் மற்றும் உரிய செயற்கருவிகளோடும் நிலைநிறுத்தம் செய்து 1000-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தொடர்ந்து விழிப்புடன் பாதுகாப்பு பணி மேற்கொள்ள தயார் நிலையில் உள்ளனர்.

- ஒவ்வொரு வருடமும் தீபாவளி திருநாளை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மற்றும் வழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை விபத்துகளை வெகுவாக குறைத்து வருகிறது. இந்த வருடமும் தீபாவளி பண்டிகையை "விபத்தில்லாத-பாதுகாப்பான பண்டிகையாக" கொண்டாடுவதற்கு ஏதுவாக கீழ்கண்ட நடைமுறைகளை பட்டாசு வெடிக்கும் போது தவறாமல் கடைபிடிக்குமாறு பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- நீதிமன்ற உத்தரவின்படியும் மற்றும் தமிழக அரசு அறிவிக்கும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பட்டாசு வெடிக்க வேண்டும்.

- வழிப்பாட்டு தளங்கள், மருத்துவமனை, பெட்ரோல் பங்க், எரிவாயு குடோன் மற்றும் குடிசைப்பகுதிகள் ஆகியவற்றின் அருகில் பட்டாசு வெடிக்ககூடாது.

- பட்டாசுகளை முறையாக தீஉரிமம் பெற்ற கடைகளிலேயே வாங்க வேண்டும்.

- பட்டாசுபெட்டியில் அச்சடிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை கவனமுடன் படித்து பார்க்க வேண்டும்.

- பட்டாசு வெடிக்கும் பொழுது இறுக்கமாக பருத்தி ஆடைகள், பாதுகாப்புக்கு காலணிகள் அணிந்து கொள்ள வேண்டும்.

- பட்டாசு வெடிக்கும் இடத்தில் ஒரு வாளி நீர் மற்றும் மணல் ஆகியவற்றை பக்கத்தில் பாதுகாப்பிற்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

- பெரியவர்களின் மேற்பார்வையில் குழந்தைகள் பட்டாசு வெடிக்க வேண்டும்.

- திறந்த வெளியில் பட்டாசு வெடியுங்கள்.

- ராக்கெட்டுகள் பற்றவைக்கும் பொழுது ஜன்னல் அல்லது கதவு போன்ற எந்தவொரு தொடக்கத்தையும் எதிர்கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

- நீண்ட ஊதுவர்த்திகளை கொண்டு பட்டாசுகளை வெடியுங்கள் அவ்வாறு செய்யும் பொழுது முகத்தினை பாதுகாப்பாக வேறுபக்கம் திருப்பிக் கொள்ள வேண்டும்.

- ஆடையில் தீபற்றினால் ஓடாதீர்கள், உடனே தண்ணீர் ஊற்றி அணையுங்கள் நின்று கீழே படுத்து உருளுங்கள் (STOP, DROP, ROLL).

- எதிர்பாராது தீக்காயம் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக அத்தீக்காயத்தின் மீது தொடர்ந்து குளிர்ந்த நீரை ஊற்றி தீக்காயத்தின் தீவிரத்தை குறைக்கலாம். அதனை தொடர்ந்து உடனடியாக மருத்துவ உதவியை நாடலாம்.

- எரிந்து முடிந்த பட்டாசு கம்பி மத்தாப்பு ராக்கெட் ஆகியவற்றை தண்ணீர் உள்ள வாளியிலோ அல்லது உலர்ந்த மண்ணிலோ அழுத்திட வேண்டும்

இந்த அறிவுரைகளை பொதுமக்கள் தவறாமல் கடைபிடிக்குமாறும் பட்டாசு வெடிக்கும் பொழுது முதியவர்கள், குழந்தைகள், பெண்கள், நோயாளிகள் மற்றும் விலங்குகளை மனதில் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மிகவும் நேர்த்தியான விரிவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் “விபத்தில்லாத மற்றும் பாதுகாப்பான” தீபாவளி கொண்டாட்டத்திற்கு நீதிமன்றம் மற்றும் தமிழக அரசின் வழிகாட்டுதல்களை பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கடைபிடித்து- தீபாவளியை மகிழ்ச்சியுடனும் பாதுகாப்புடனும் கொண்டாடிட தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை வாழ்த்துகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை,
சென்னை - 9